வசதிகளைப் பழுதடையாமல் பாதுகாப்பதற்காகத் தொழில்நுட்ப ரீதியாக எடுக்கப்படுகின்ற முடிவே தவிர, வேறொன்றும் இல்லை. இந்தத் தொழில்நுட்ப விஷயங்கள் தெரியாததால், சிலர் மேலெழுந்தவாரியாக இந்தப் பிரச்சினைகளை எழுப்புகிறார்கள். ஆனால், இப்பொழுது உரிய ஆய்வுகள் மேற்கொண்டு அதற்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காகவும், வழித்தடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெறுகின்ற இந்த அரசு உரிய நடவடிக்கைகளைப் புயல் வேகத்தில் எடுத்து வருகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

2—

விடுகள் கட்டுதல்

***41546—திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதியிலுள்ள எம்.சி. சாலை, ரஃபீக் நகர், சாமி நகர், சலாவுதீன் நகர், சான்றோர் குப்பம் ஆகிய பகுதிகளில் குடிசைகளில் வசிக்கும் மக்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

முற்பகல் 10-20

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் நகரத்திற்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள ரஃபீக் நகர், சாமி நகர், சலாவுதீன் நகர், சான்றோர் குப்பம், கன்னிகாபுரம் போன்ற பகுதிகளில் 2,000-க்கும் மேற்பட்ட மக்கள் குடிசைகளில் வாழ்கின்றார்கள். தினந்தோறும் கூலி வேலைக்குச் செல்கின்றவர்கள், பீடித் தொழில் செய்கின்ற மக்கள் 50 ஆண்டுகளுக்கும் மேலாக அந்தப் பகுதிகளில் வசித்து வருகிறார்கள். தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கத்தின் காரணமாக, தற்போது அங்கு வாழ்கின்றவர்களை அப்பகுதிகளிலிருந்து அப்புறப்படுத்தவிருக்கிறார்கள். அவர்கள் எங்கே செல்வது என்று தெரியாமல் மிகப் பெரிய கேள்விக்குறியோடு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். தமிழக அரசினால் செயல்படுத்தப்படும் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், பசுமை வீடுகள் திட்டம் போன்ற திட்டங்கள் ஏதும் நகரப் பகுதிகளில் வசிக்கின்ற மக்களுக்குக் கிடையாது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாலையோரங்களில் வசிக்கின்ற அந்த மக்களின் நலன் கருதி, பரிசீலனை செய்து, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டித் தருவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்டத்தின் மூலமாகவும், 'அனைவருக்கும் வீடு' திட்டத்தின் மூலமாகவும், 13-வது நிதிக் குழுத் திட்டத்தின் மூலமாகவும் நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் குடிசைகள் அப்புறப்படுத்தப்பட்டு வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. மெகா சிட்டி-சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 3 மாநகராட்சிகளில் மட்டும் ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்டத்தின்கீழ் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக ஏழையெளிய மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. 12 மாநகராட்சிகளில்*

2015 பிப்ரவரி 18]

'அனைவருக்கும் வீடு' திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 13-வது நிதிக் குழுவின் மூலமாக நிதியைப் பெற்றுத்தான் நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் இதைச் செயல்படுத்தமுடியும்.

மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த அரசு, 14-வது நிதிக் குழுவிடம் நகராட்சி, பேரூராட்சிகளில் வாழும் குடிசைவாழ் குடும்பங்களுக்கு 1,10,000 குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ.7,150 கோடி நிதி கேட்டிருக்கிறது. அந்த நிதி வந்தவுடன் மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதிக்கு முன்னுரிமை அளித்து, பரிசீலிக்கப்பட்டு, அப்பகுதிகளில் குடிசைகளில் வாழ்கின்ற மக்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனை செய்து வீடுகள் கட்டித் தரப்படும் என்று உறுதியளித்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதியில், சேலம் மாநகராட்சி 28-வது கோட்டத்தில் காந்தி நகர் என்ற பகுதியில் இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற குடியிருப்பு மிகவும் பழுதடைந்திருப்பதால், அரசின் சார்பாகப் புதிய வீடுகள் கட்டித் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதில் என்ன பிரச்சினை என்று சொன்னால், அந்தக் குடியிருப்புகளில் கடந்த காலங்களில் ஏற்கெனவே வாழ்ந்தவர்கள் தங்கள் கஷ்டங்களின் காரணமாக அவர்களுடைய வீடுகளை விற்றுவிட்டனர். சென்றவர்களுக்குப் பதிலாக வேறு நபர்கள் வசிக்கிறார்கள். தற்போது அவர்கள் அந்தக் குடியிருப்புகளிலிருந்து